1978 செப்டம்பர் 13]

[பிற்பகல் 12-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—"தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 33/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 சட்டப் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/1978) சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக ஆக்கப் பெற்றது.

(இ) 1978 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1978.)

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, "22-7-1978 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1978ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/1978) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 32/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

---

*1978 செப்டம்பர் 7 ஆம் தேதிய தமிழ்நாடு **சிறப்பு அரசிதழில்** வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அவையின் ஒப்புதலுக்காக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள 1978ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை அங்கீகரிக்க வேண்டுமென்பதற்கே இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதன் பேரில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல முயலுகிறேன்.

(2) ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி)

(ஈ) எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பிற்கு அடிக்கப்பெற்ற மணியின் ஓசை குறித்து.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கத்தை அவையில் வைக்க விரும்புகிறேன். காரணம், அதிலே தவறு உண்மையில் இருக்குமானல் உடனடியாகப் பரிசீலித்து அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் சொல்லுகிறேன். வாக்கெடுப்பு நடந்து முடிந்த பிறகு உறுப்பினர்கள் உள்ளே வந்திருக்கிருர்கள். மணி அடித்தது லாபியில் கூடக் கேட்கவில்லை.

It may kindly be tested, Supposing it is true, i can be rectified.

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, With due respect to my Hon. Colleague Mr. Edmund, I do not consider this as a point of order. Things have been over. Let us come to next business.

திரு. ரா. உமாநாத் : நான் பாயின்ட் ஆப் ஆர்டராகச் சொல்லவில்லை. மணி அடிக்கிற அரேஞ்ச்மென்ட்டில் ஏதாவது குறைபாடு என்ருல் செக் பண்ணுங்கள்.

There should not be any unfairness to anybody.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. அப்படி ஒரு குறைபாடு இருக்குமானல் நிச்சயம் நிவர்த்தி செய்யப்படும். மணி எல்லா இடங்களிலும் கேட்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. மு. கருணநிதி : அப்படியானல் இப்போது குறைபாடு இருந்தது என்று ஒத்துக் கொள்கிறீர்களா? அப்படியானல் மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'குறைபாடு இருக்குமானல்' என்றுதான் சொல்லியிருக்கிறேன். இப்போது ஏதும் இல்லை.